# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016 1285

| தரம் : 08 | சைவநெறி<br>பெயர் / சுட்டெண் : .................................................... | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|


### பகுதி - I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. ஆவணி மாதச் சதுர்த்தியில் தோன்றியவர்
1) சிவபெருமான் 2) விநாயகர்
3) விஷ்ணு 4) முருகன்

02. மெய்யடியார் வரலாறு கூறும் நூல்
1) பெரியபுராணம் 2) கந்தபுராணம்
3) சிவபுராணம் 4) பிரமபுராணம்

03. இறைவனின் அருவுருவத் திருமேனி
1) நடராஜர் 2) சிவலிங்கம்
3) தெட்சணாமூர்த்தி 4) இலிங்கோற்பவர்

04. சிவாகமங்களின் எண்ணிக்கை
1) 12 2) 14
3) 28 4) 207

05. அஸ்வமேத யாகம் செய்த பலனைத் தரும் விரதம்
1) ஆவணி ஞாயிறு 2) புரட்டாதிச் சனி
3) கிருஷ்ணஜெயந்தி 4) விநாயக சட்டி

06. 'பாண்டிமாதேவி' என அழைக்கப்பட்டவர்
1) திலகவதியார் 2) மங்கையர்க்கரசியார்
3) மாதினியார் 4) பகவதியார்

07. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் படிக்காசு பெற்ற தலம்
1) திருமறைக்காடு 2) திருவீழிமிழலை
3) திருவாரூர் 4) திருக்கழு மரம்

08. "மண்ணில் நல்லவண்ணம்...." என்ற தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவ வடிவம்
1) அர்த்தநாரீஸ்வரர் 2) நீலகண்டர்
3) கங்காதரர் 4) சந்திரசேகரர்

09. திருமறைக்காட்டுக் கதவு திறக்கப் பாடிய பதிகம்
1) "சதுரம்மறைதான்...." 2) "குனித்த புருவமும் ...."
3) "பண்ணிநேர்மொழி......" 4) "நீளநினைந்தடியேன்...."



kalvi.lk

10. சுந்தரமூர்த்தி நாயனார் நெல் பெறத் துதித்த இறைவன்
   1) தோணியப்பர்  2) திருவேகம்பர்
   3) தியாகேசர்  4) திருக்கோளிலிநாதர்

11. திருத்தொண்டத்தொகை பாடியவர்
   1) திருஞானசம்பந்தர்  2) திருநாவுக்கரசர்
   3) சுந்தரமூர்த்தி நாயனார்  4) மாணிக்கவாசகர்

12. சாத்வீகம், இராசதம், தாமதம் என்பன
   1) முக்குணம்  2) மும்மலம்
   3) முப்பொருள்  4) முக்கனி

13. மாணிக்கவாசகர் பாடிய திருமுறை
   1) 7ம் திருமுறை  2) 4ம் திருமுறை
   3) 8ம் திருமுறை  4) 9ம் திருமுறை

14. தேர் நகரப் பாடிய பாடல் வகை
   1) திருவாசகம்  2) திருவிசைப்பா
   3) திருப்பல்லாண்டு  4) திருப்புராணம்

15. திருஞானசம்பந்தர் பிறந்த நட்சத்திரம்
   1) திருவாதிரை  2) திருவோணம்
   3) விசாகம்  4) அனுஷம்

16. திருநாவுக்கரசர் முத்தியடைந்த தினம்
   1) வைகாசிமூலம்  2) சித்திரைச்சதயம்
   3) ஆனிமகம்  4) ஆடிச்சுவாதி

17. பெரியபுராணம் பாடியவர்
   1) சேந்தனார்  2) திருமாளிகைத்தேவர்
   3) சேக்கிழார்  4) திருமூலர்

18. "மிண்டு மனத்தவர்...." என்ற திருப்பல்லாண்டின் பண்
   1) நட்டராகம்  2) நட்டபாடை
   3) புறநீர்மை  4) பஞ்சமம்

19. ஆயிரம் நாமம் கூறும் அர்ச்சனை
   1) சஹஸ்ரநாம அர்ச்சனை  2) திரிசதிநாம அர்ச்சனை
   3) சோடசநாம அர்ச்சனை  4) அஷ்டோத்தரநாம அர்ச்சனை

20. சைவசித்தாந்தக் கருத்துக்களையும் ஒழுக்கநெறிகளையும் கூறும் நூல்
   1) திருவிசைப்பா  2) திருமந்திரம்
   3) திருக்கோவையார்  4) பெரியபுராணம்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. **பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டை வரிக்கிரமமாக எழுதிப் பாடியவர், தலம் தருக.**

1) "நீளநினைந்தடியேன்......."
2) "தில்லைவாழந்தணர்"
3) "பாரொடு விண்ணாய்......"
4) "ஏகநாயகனை........."

(8 + 1 + 1 x 2 = 20 புள்ளிகள்)

02. **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**

1) ஆலயம் என்ற சொல்லின் பொருள் யாது?
2) நீர் ஆலய வழிபாடு செய்த நாட்கள் நான்கு தருக. அதனால் பெற்ற பயன்கள் யாவை?
3) ஒவ்வொரு ஜீவான்மாவினதும் குறிக்கோள் யாது?
4) அர்ச்சனை என்றால் என்ன?

(2 + 3 + 2 + 3 = 10 புள்ளிகள்)

03. **"பெரியபுராணம் கூறும் பெண்ணடியார் மங்கையர்க்கரசியார்"**

1) மங்கையர்க்கரசியாரது இயல்புகள் 4 தருக.
2) திருவாலவாய் இறைவன், இறைவி பெயர்கள் யாவை?
3) மங்கையர்க்கரசியாரின் இளமைப்பெயர், தந்தை பெயர், கணவன் பெயர் என்பவற்றைத் தருக.
4) குலச்சிறையாரின் சிறப்புகள் 3 தருக.

(2 + 2+ 3 + 3 = 10 புள்ளிகள்)

04. **"திருமுறைகள் தெய்வீக உணர்வைப் பெருக்குவன. "**

1) திருமுறைகள் எத்தனை? அடங்கன் முறையில் இடம்பெறும் திருமுறைகள் எவை?
2) 10ம் திருமுறை யாது? பாடியவர் யார்? பாடல்களின் எண்ணிக்கை யாது?
3) திருவிசைப்பா என்ற சொல்லின் பொருள் யாது? இடம்பெறும் திருமுறை எது?
4) பஞ்சபுராணம் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக.

(2 + 3 + 3 + 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

05. **"சமயகுரவர்கள் நால்வராவர்"**

1) திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் 3 தந்து, அதற்குரிய பாடல்களைக் குறிப்பிடுக.

2) திருநாவுக்கரசரது பெற்றோர் பெயர், பிறந்த நாடு, இளமைப் பெயர் என்பவற்றைத் தருக.

3) மாணிக்கவாசகர் செய்த தொழில், பெற்ற பட்டம், இறைவன் அருளிய சந்தர்ப்பங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.

4) சமயகுரவர் நால்வரும் சைவ சமயத்தைப் பேணிய முறையைக் குறிப்பிடுக.

(3 + 2 + 3 + 2 = 10 புள்ளிகள்)

06. **"விரதங்கள், பண்டிகைகள் விழுமியப் பண்புகளை வளர்ப்பன."**

1) விரதங்களை அநுட்டிப்பதால் ஒருவரிடம் வளரும் பண்புகள் எவை?

2) விநாயக ஷஷ்டி விரதம் அநுட்டிக்கும் காலம் யாது?

3) பண்டிகைகளுக்கும் விரதங்களுக்குமான ஒற்றுமை, வேற்றுமைகளைத் தருக.

4) நீர் கைக்கொள்ளும் விழுமியப் பண்புகள் 3 தருக.

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

07. **"சிவன் முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவநெறி"**

1) இறைவனின் இயல்புகள் 4 தருக.

2) இறைவனைக் குறிக்கும் மறுபெயர்கள் 3 தந்து, அவற்றிற்கான விளக்கத்தைத் தருக.

3) நீர் வீட்டில் இறைவழிபாடாற்றும் முறையைத் தருக.

4) வாழ்க்கையில் இறைவன் உமக்கு அருள் செய்தமை பற்றிக் குறிப்பிடுக.

(2 + 3 + 3 + 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page